
# பாடம் 6



## ஒரு கருத்துப் பொருள்

*சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர்*

## வேதாகமக் கதை

***சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர் என்று கற்பிக்கும் கதையை உபயோகப்படுத்துங்கள்***

சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர்

**நற்செய்தி கதைப்புத்தகம் மூன்று. பக்கம் 2-27.** *கொடிய அரசன்.*

குழந்தைகளோடு சேர்ந்து *நற்செய்தி கதைப்புத்தகம் மூன்றிலுள்ள,* 'கொடிய அரசன்' கதையைக் கூறும்போது அதை நாடகமாக நடித்துக் காண்பியுங்கள்.


நடிப்பவர்கள்: கதை வர்ணிப்பவர் மற்றும் இயக்குனர் (ஆசிரியர்). கொடிய அரசன் (ஒரு குழந்தை) மோசே (ஒரு குழந்தை). ஆரோன் (ஒரு குழந்தை) மூன்று மந்திரவாதிகள் (மூன்று குழந்தைகள்). சிருஷ்டிகரான தேவனிடம் பாடும் குழந்தைகள் (கதையில் நடிக்காத மற்ற எல்லாக் குழந்தைகளும்).

கொடிய அரசனை முன்னால் வந்து அமர வையுங்கள். குழந்தைகளிடம் அவன் அமர்ந்திருக்கும் இடம் கொடிய அரசனின் அரண்மனை என்றும் கொடிய அரசனின் அரண்மனைக்குள் மற்றக் குழந்தைகள் வரமுடியாது என்றும் விளக்க வேண்டும். மோசேயும் ஆரோனும் குழந்தைகளின் அருகில் அனைவரும் பார்க்கும்படி நிற்க வேண்டும். மூன்று மந்திரவாதிகளும் கொடிய அரசனின் பின்னால், அவனது அரண்மனையில் நிற்க வேண்டும்.

எல்லாக் குழந்தைகளுக்கும் இந்நாடகத்தில் பங்குண்டு. நீங்கள் கதையை வாசித்துச் சொல்லும் போது, அந்தந்த நடிகரின் பகுதி வரும்போது, நடிக்க வேண்டிய குழந்தைகளைக் குறிப்பிட்டு வழிநடத்துங்கள். குழந்தைகள் குறிப்பிட்ட நடிகர் நடிப்பதையும் சொல்வதையும் நன்றாகக் கவனிக்க வேண்டும். பின் குழந்தைகள் அதற்கேற்றபடி கதையில் தங்கள் பங்கை நடிக்க வேண்டும்.

*எடுத்துக் காட்டு:* 2-3 பக்கங்களில் உள்ள கதையை (ஆசிரியர்) வாசித்து அக்குழந்தைகள் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது. 'சிருஷ்டிகரான தேவனே எங்களை தயவாய் மீட்டுக்கொள்ளும்,' என்கிறார்கள், என்று கூறிய பின் வாசிப்பதை நிறுத்தி நாடகத்தில், 'சிருஷ்டிகரான தேவனை நோக்கிப் பாடும் குழந்தைகளை' கை நீட்டி குறிப்பிட வேண்டும். உடனே சிருஷ்டிகரான தேவனை நோக்கிப் பாடும் குழந்தைகளாக நடிக்கும் அக்குழந்தைகள், 'சிருஷ்டிகரான தேவனே எங்களை தயவாய் மீட்டுக்கொள்ளும்' என்று கூற வேண்டும்.

# பாடம் 6



*எடுத்துக்காட்டு:* பக்கங்கள் 4-6 ஆசிரியர் வாசிக்க வேண்டும். (ஆசிரியர்) 'மோசே எரியும் மரத்தைக் காண்பதை என்னால் பார்க்க முடிகிறது,' என்று வாசித்துவிட்டு, நிறுத்தி, மோசேயாக நடிக்கும் குழந்தையை நோக்கிக் கைநீட்ட வேண்டும். உடனே மோசேயாக நடிக்கும் அக்குழந்தை எரிகிற மரத்தை ஆச்சிரியத்துடன் பார்ப்பதுபோல் நடிக்க வேண்டும்.

இவ்வாறு கதை முழுவதும் வாசித்து, ஒவ்வொரு முறையும் தகுந்த இடத்தில் நிறுத்தி, அப்பகுதியை நடிக்க வேண்டிய குழந்தையைக் குறிப்பிட வேண்டும். அப்பொழுது அவர்கள் கதையில் தங்கள் கதாபாத்திரம் சொல்வது, செய்வதுபோல் சொல்ல, நடிக்க வேண்டும்.

1, 2, 3 நாடகத்தைத் தொடங்குவோம்…

வாசித்து, நடித்து முடித்த பின் குழந்தைகளிடம் அக்கதையைக் குறித்த கேள்விகளைக் கேளுங்கள். தவறான பதில் தந்தால் நன்முயற்சி ஆனால் சரியான பதில் இல்லை என்று ஊக்கப்படுத்துங்கள். சரியான பதில் அவர்கள் சொல்லும் வரை அதே கேள்வியைக் கேளுங்கள். சரியான பதில் தரும் போது பாராட்டுங்கள்.

சில கேள்விகள்.

சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர்

**கொடிய அரசன் யாரை வெறுக்கிறான்?**
சிருஷ்டிகரான தேவனைப் பாடும் ஒவ்வொருவரையும் வெறுக்கிறான்.

**தன் மக்களை விடுதலையாகப் போக விடு என்று கொடிய அரசனிடம் சொல்வதற்கு சிருஷ்டிகரான தேவன் யாரை அனுப்பினார்?**
மோசேயையும், ஆரோனையும்.

**சிருஷ்டிகரான தேவன் ஆரோனிடம் என்ன கூறினார்?**
உன் கைத்தடியைக் கீழே போடு.

**ஆரோன் என்ன செய்தான்?**
ஆரோன் தன் கைத் தடியைக் கீழே போட்டான்.

**ஆரோனின் கைத்தடி என்னவாயிற்று?**
ஆரோனின் கைத்தடி ஒரு பாம்பாக உருவெடுத்தது.


# பாடம் 6





**தம் மக்கள் சாவிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள சிருஷ்டிகரான தேவன் என்ன செய்யச் சொன்னார்?**
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை வீட்டு வாசல் நிலைகளில் பூசச் சொன்னார்.

**இக்கதையின் மூலம் நாம் கற்பது என்ன?**
நாம் சிருஷ்டிகரான தேவனிடம் பேசும் போது அவர் நம்மைக் கேட்கிறவர். சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைக் காக்கிறவர். சிருஷ்டிகரான தேவன் தம் மக்களை மீட்கிறவர்.


x2

## செய்கைப் பாடல்

***சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர் என்பதைக் கற்பிக்கும் ஒரு செய்கைப் பாடலைக் கற்றுக்கொடுங்கள்***

வல்லமை உண்டு, உண்டு, அற்புத வல்லமை
இயேசுவின் இரத்தத்தால்
வல்லமை உண்டு, உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்!

## பொருள் கண்டு கற்றல்

சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர் என்பதை விளக்க ஒரு பொருளை உபயோகப்படுத்துங்கள்.

**தேவையான பொருட்கள்:** ஒரு குழந்தையை மூடக்கூடிய அளவிலான ஒரு பெரிய போர்வை.

சிருஷ்டிகரான தேவனிடம் பாடும் மக்களைக் கொடிய அரசனின் சேனையிடம் இருந்து சிருஷ்டிகரான தேவன் எப்படிப் பாதுகாத்தார் என்ற கதை ஞாபகம் இருக்கிறதா?

சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர்

நான் அது எப்படி என்று காண்பிக்கிறேன். ஒரு குழந்தையை உங்களுக்கு உதவ உங்களோடு முன்னால் வந்து நிற்க அழையுங்கள்.


(பின் போர்வையைக் காண்பித்து) **இப்போர்வை தெரிகிறதா?** குழந்தைகள்: ஆம்

பின் அதைக்கொண்டு அக்குழந்தையின் உடல் முழுவதும் நன்கு மூடுங்கள்.

அந்தக் குழந்தையிடம், **'போர்வையின் உள்ளே காற்று வீசுவதை உணர முடிகிறதா?'** என்று கேளுங்கள். குழந்தை 'இல்லை' என்று கூறுவான்.

இப்போர்வையும் நம்மைப் பாதுகாக்கும் சிருஷ்டிகரான தேவனைப் போன்றது. சிருஷ்டிகரான தேவன் நம்மைத் தம் அன்பினால் மூடி, தீய ஆவிகள் மற்றும் தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கிறார்.

# பாடம் 6



## வேதவசன மனப்பாட விளையாட்டு

***சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர் என்ற கருத்தைக் கற்பிக்கும் வேத வசனத்தை உபயோகியுங்கள்***

*கர்த்தர்* என்பது சிருஷ்டிகரான தேவனின் மற்றொரு நாமம் என்று விளக்குங்கள்.

சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர்

**யாத்திராகமம் 14:14** *'நீங்கள் எதையும் செய்யாமல் அமைதியாக இருந்தால் போதும், கர்த்தர் உங்களுக்காகப் போரிடுவார்.'*

**தேவையான பொருட்கள்:** எழுதுவதற்குக் கரும்பலகை மற்றும் சுண்ணாம்பு எழுதுகோல், அல்லது மண் மற்றும் குச்சி, அல்லது தாள் மற்றும் எழுது கோல், அழிப்பான்.

வேதவசனத்தைக் கரும்பலகையில் எழுதி, அதைச் சத்தமாகச் சொல்லுங்கள். நீங்கள் எழுதிக்கொண்டிருக்கும்பொழுதே, குழந்தைகளை உங்களுக்குப் பின் மறுமொழியாக அவ்வசனத்தைக் கூறச் சொல்லுங்கள். குழந்தைகள் இன்னும் எழுத வாசிக்க அறியவில்லை என்றால் வசனத்தை எழுத வேண்டியதில்லை. வசனத்தைக் கூறி, கற்றுக் கொடுங்கள்.

ஆசிரியர்: நீங்கள் குழந்தைகள்: நீங்கள் ஆசிரியர்: எதையும் செய்யாமல் குழந்தைகள்: எதையும் செய்யாமல் ஆசிரியர்: அமைதியாக இருந்தால் போதும், குழந்தைகள்: அமைதியாக இருந்தால் போதும், ஆசிரியர்: கர்த்தர் குழந்தைகள்: கர்த்தர் ஆசிரியர்: உங்களுக்காகப் போரிடுவார். குழந்தைகள்: உங்களுக்காகப் போரிடுவார்.

எழுதிய வசனத்தில் மூன்று வார்த்தைகளை அழித்துவிட்டு, ஒரு சிறுவனை அழைத்து அதை நிரப்பச் சொல்லுங்கள். எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து வசனத்தைக் கூற வேண்டும். பின் வேறு மூன்று வார்த்தைகளை அழித்துவிட்டு ஒரு சிறுமியை அழைத்து அதை நிரப்பச் சொல்லுங்கள். பின் அனைவரும் சேர்ந்து வசனத்தைக் கூறவேண்டும்.

## நடைமுறை செயல்படுத்தல்

***சிருஷ்டிகரான தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறவர் என்பதைக் கற்பிக்கும் நடைமுறை செயல்படுத்தல் ஒன்றை உபயோகியுங்கள்***

நாம் திகில்கொள்ளும்போது, நாம் சிருஷ்டிகரான தேவனை நோக்கிப் பாட வேண்டும். அப்பொழுது அவர் நம் பயத்தை நீக்குவார். சிருஷ்டிகரான தேவன் நம்மைப் பாதுக்காக்கிறவர்; ஆகையால் நமக்கு சமாதானம் உண்டாகும்.

ஜெபம்: சிருஷ்டிகரான தேவனே, நீர் என்னை தீய ஆவிகள் மற்றும் தீய சக்திகளிடமிருந்து பாதுக்காக்கிறபடியால் உமக்கு நன்றி. என்னை நீர் நேசிக்கிறபடியால் உமக்கு நன்றி. ஆமென்.

# பாடம் 7



## ஒரு கருத்துப் பொருள்

*சிருஷ்டிகரான தேவன் எனக்கு வாழ்வளிக்கிறவர்*

## வேதாகமக் கதை

சிருஷ்டிகரான தேவன் எனக்கு வாழ்வளிக்கிறவர்

***சிருஷ்டிகரான தேவன் எனக்கு வாழ்வு அளிக்கிறார் என்று கற்பிக்கும் கதையைக் கூறுங்கள்.***

**நற்செய்தி கதைப்புத்தகம் மூன்று. பக்கம் 28-32.** *ஆடு மேய்க்கும் சிறுவன்.*

**தேவையான பொருட்கள்:** வரைகிறதற்குக் கரும்பலகை மற்றும் சுண்ணாம்பு எழுதுகோல், அல்லது மண் மற்றும் குச்சி அல்லது காகிதம் மற்றும் எழுதுகோல். குழந்தைகளுக்கு ஒரு வரைபடக் காகிதம் அல்லது தாள் மற்றும் எழுதுகோல், அழிப்பான்.

வரைந்து கதையை விவரியுங்கள்.



1, 2, 3 கதை கேட்கலாம்…

ஒரு ஆடு மேய்க்கும் சிறுவனை என்னால் பார்க்க முடிகிறது. அவன் பெயர் தாவீது.தாவீது ஆபிரகாமின் குடும்பத்தில் வந்தவன். அநேக வருடங்கள் கழிந்தன. ஆடு மேய்க்கும் சிறுவனான தாவீது, இப்போது அரசன்.

அரசனாகிய தாவீது சிருஷ்டிகரான தேவனைப் பாடுகின்றதை என்னால் கேட்க முடிகிறது.





'சிருஷ்டிகரான தேவனே நீரே எனக்கு எல்லாம்.

சிருஷ்டிகரான தேவனே, நீர் எனக்கு வாழ்வு தருகிறீர்.

சிருஷ்டிகரான தேவனே, நீர் எனக்கு சமாதானம் தருகிறீர்.

சிருஷ்டிகரான தேவனே, நீர் என்னை விடுவிக்கிறீர்.

சிருஷ்டிகரான தேவனே, நீர் என்னைப் பாதுகாக்கிறீர்.

சிருஷ்டிகரான தேவனே, நீர் என்னை நேசிக்கிறீர்.

சிருஷ்டிகரான தேவனே, நீர் என்றென்றும் உள்ள சதாகாலமும் என்னோடிருக்கிறீர்.'


சிருஷ்டிகரான தேவன் அரசனாகிய தாவீதிடம் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது, 'உன் குடும்பம் மூலமாக எல்லோரையும் என்றென்றும் உள்ள சதாகாலம் விடுவிப்பேன்.' சிருஷ்டிகரான தேவன் வருகிறார்…


**குழந்தைகளை இக்கதையை வரையச் சொல்லுங்கள்.**

# பாடம் 7









## செய்கைப் பாடல்

***சிருஷ்டிகரான தேவன் எனக்கு வாழ்வளிக்கிறவர் என்று கற்பிக்கும் ஒரு செய்கைப் பாடலைக் கற்பியுங்கள்***

நேர்த்தியானதனைத்தும்
சின்னம் பெரிதெல்லாம்
ஞானம் விந்தை ஆனதும்
கர்த்தாவின் படைப்பாம்!

பற்பல வர்ணத்தோடு
மலரும் புஷ்பமும்
இனிமையாகப் பாடி
பறக்கும் பட்சியும் – நேர்த்தி

நம் சர்வ வல்ல கர்த்தர்
எல்லாம் நன்றாய்ச் செய்தார்
இதை நாம் பார்த்துப் போற்ற
நாவையும் சிருஷ்டித்தார் - நேர்த்தி

## பொருள் கண்டு கற்றல்

***சிருஷ்டிகரான தேவன் எனக்கு வாழ்வு அளிக்கிறார் என்பதை ஒரு பொருள் மூலம் கற்றுக் கொடுங்கள்***

**தேவையான பொருள்:** பலூன்.

காற்று அடைக்கப்படாத பலூன் ஒன்றைத் தரையில் வீசுங்கள். குழந்தைகளிடம், ‘பலூனில் காற்று இல்லாததினால் அது அசையவில்லை பறக்கவில்லை. இப்போது கவனியுங்கள்.’

சிருஷ்டிகரான தேவன் எனக்கு வாழ்வளிக்கிறவர்

பலூனில் நன்றாகக் காற்று ஊதி, காற்று வெளியேறாதபடிக் கட்டுங்கள். குழந்தைகளிடம், ‘நான் காற்று ஊதினபின் பலூன் அசைந்தாடி பறப்பதைப் பாருங்கள். சிருஷ்டிகரான தேவனும் முதல் மனிதனையும் மனுஷியையும் உண்டாக்கி, அவர்கள் மேல் தம் ஜீவ சுவாசத்தை ஊதினார். அவர்கள் உயிரடைந்தார்கள். சிருஷ்டிகரான தேவன் நமக்கு வாழ்வு தருகிறார்’ என்று கூறுங்கள்.

## வேத வசன மனப்பாட விளையாட்டு

***சிருஷ்டிகரான தேவன் நமக்கு வாழ்வளிக்கிறவர் என்பதைக் கற்பிக்கும் வேத வசனத்தை உபயோகியுங்கள்***

*கர்த்தர்* என்பது சிருஷ்டிகரான தேவனின் மற்றொரு நாமம் என்று விளக்குங்கள்.

**சங்கீதம் 23:6** *‘என் ஆயுள் முழுவதும் உமது நன்மையும் இரக்கமும் (சிருஷ்டிகரான தேவன்) என்னோடிருக்கும்; நித்திய காலமாக நான் கர்த்தருடைய ஆலயத்தில் அமர்ந்திருப்பேன்.’*

# பாடம் 7

**வார்த்தையில்லா நடிப்பு**

குழந்தைகளை இரண்டு அணிகளாகப் பிரித்து வையுங்கள். முதல் அணிக் குழந்தைகளைத் தங்களுக்கு ஓர் அணித்தலைவரைத் தேர்வு செய்யச் சொல்லுங்கள். பின் அணித்தலைவரை உங்களிடம் முன்னால் அழைத்து, மற்றக் குழந்தைகள் கேட்காதபடி வசனத்தின் முன்பாகமாகிய 'என் ஆயுள் முழுவதும் உமது நன்மையும் இரக்கமும் (சிருஷ்டிகரான தேவன்) என்னோடிருக்கும்' என்று கூறுங்கள். பின் முதல் அணித் தலைவன் முதலணியினருக்கு அவ்வசனத்தை (வார்த்தையில்லாமல்) நடித்துக் காட்ட வேண்டும். அந்த அணிக்குழந்தைகள், வசனத்தை யூகித்துக் கண்டுபிடிக்க வேண்டும்.

சிறிது நேரம் கழித்து, முதல் அணியினரால் அதைக் கண்டுபிடிக்க இயலாவிட்டால் இரண்டாம் அணியினர் யூகிக்க வேண்டும். அவர்களாலும் கண்டுபிடிக்க முடியாவிட்டால், சில துப்புகளை நீங்கள் கொடுங்கள்.

பின் வசனத்தின் முதல் பாகத்தை நீங்கள் கூறியோ அல்லது குழந்தைகளே யூகித்து அறிந்து கொண்டபின், இரண்டாம் அணித்தலைவரை முன்னே அழைத்து, இரண்டாம் பாகத்தை மற்றக் குழந்தைகளுக்கு கேட்காதபடி சொல்லுங்கள். 'நித்திய காலமாக நான் கர்த்தருடைய (சிருஷ்டிகரான தேவனின்) ஆலயத்தில் அமர்ந்திருப்பேன்.' இதை இரண்டாம் அணித்தலைவர் (வார்த்தைகளின்றி) நடித்துக் காட்ட வேண்டும். இரண்டாம் அணியினர் அதை யூகித்துச் சொல்லவேண்டும்.

அவர்களால் வசன வார்த்தைகளை சிறிது நேரமான பின்னும் யூகிக்க முடியாவிட்டால், முதல் அணியினர் முயற்சிக்க வேண்டும். அவர்களாலும் முடியாவிட்டால் ஆசிரியர் மேலும் சில துப்புகளைக் கூறி உதவ வேண்டும்.

பின் வசனத்தை குழந்தைகள் ஆசிரியர் மூலமோ, யூகித்தோ அறிந்து கொண்டபின், குழந்தைகள் முழு வசனத்தையும் கூற வேண்டும். மனனம் செய்யச் சொல்லுங்கள்.

சிருஷ்டிகரான தேவன் எனக்கு வாழ்வளிக்கிறவர்

## நடைமுறை செயல்படுத்தல்

***சிருஷ்டிகரான தேவன் எனக்கு வாழ்வளிக்கிறவர் என்பதைக் கற்பிக்கும் ஒரு நடைமுறைப் பயன்பாட்டை எடுத்துரையுங்கள்***

சிருஷ்டிகரான தேவன் நமக்கு வாழ்வு தருகிறவர். அவர் நமக்கு வாழ்வு அளிக்கிறதால் அவரையே பாடுகிறோம்.

ஜெபம்: சிருஷ்டிகரான தேவனே நீர் என்னை நேசிப்பதற்காகவும், உம் ஜீவ சுவாசத்தை எனக்குத் தந்ததற்காகவும் உமக்கு நன்றி. உமது நன்மையும் கிருபையும் என்றென்றைக்கும் என்னைத் தொடருவதினால் உமக்கு நன்றி. ஆமென்.

பரிசு: ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களது பிரதி *நற்செய்தி கதைப்புத்தகம் - மூன்றை* கொடுங்கள். ஒவ்வொரு குழந்தையும் தங்கள் பிரதி *நற்செய்தி கதைப்புத்தகம் மூன்றை* வாசித்து அறிந்துகொள்ள உதவிசெய்யுங்கள்.